ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020.12.14 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 ஒத்தோபர்

## முக்கிய பண்புகள்




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## பொதுநோக்கு

2020 ஒத்தோபரில் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட முதிர்வடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியினை வெற்றிகரமாக மீளச்செலுத்தியதன் மூலம் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது. வர்த்தகப் பற்றாக்குறையில் தொடர்ச்சியான மேம்படுத்தல், தொழிலாளர் பணவனுப்பல்களில் அதிகரிப்பு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட உறுதிப்பாடு என்பன மாத காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்திற்கு துணையளித்தன. குறைவான உலகளாவிய எரிபொருள் விலைகள் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் கீழ் இறக்குமதிகள் தொடர்ந்தும் கட்டுப்பட்டிருந்த அதேவேளை, ஒத்தோபரின் ஆரம்பம் தொடக்கம் கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டு உற்பத்தி மற்றும் துணைப் பணிகளுக்கான இடையூறுகளின் காரணமாகவும் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களிடமிருந்து கேள்வி குறைவடைந்தமை மூலமும் 2020 ஒத்தோபரில் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. மாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள், தொடர்ந்தும் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. நிதியியல் கணக்கில் 2020 ஒத்தோபரில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, அரச பிணையங்கள் சந்தை சிறிதளவான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மீள்கொடுப்பனவிற்கு மத்தியில் இலங்கை, 2020 ஒத்தோபர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 5.9 பில்லியன் கொண்ட அலுவல்சார் ஒதுக்கினைப் பேணியது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள், மாத காலப்பகுதியில் செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினைத் தளர்த்தியதுடன் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்ப்பதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்து, வெளிநாட்டுத் துறையிலுள்ள அபிவிருத்திகளைப் பிரதிபலித்து 2020 ஒத்தோபர் மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா சிறிதளவு உயர்வடைந்தது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | ஒத்தோபர் 2019 ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-ஒத் 2019 ஐ.அ.டொ. மில் | சன-ஒத் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 977 | 848 | -13.2 | 9,961 | 8,293 | -16.7 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,816 | 1,363 | -24.9 | 16,412 | 13,145 | -19.9 |
| வர்த்தக மீதி | -838 | -514 | | -6,451 | -4,852 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 224 (ஆ) | - | - | 2,818 (ஆ) | 956 (இ) | -66.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 607 | 631 | 3.9 | 5,537 | 5,680 | 2.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -10 | 21 | | 5 | -194 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 221 | 240 | | 6,266 | 1,799 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 57 | 1 | | 511 | 103 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 164 | 239 | | 1,356 | 1,697 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் (மொத்தம்) | - | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (உ) | | | | 772 | 555 | |
| திரண்ட நிலுவை | | | | 667 | -2,083 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான தரவுகள் கிடைக்கப்பெறுவதுடன் முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக நியதிகள்

**2020 ஒத்தோபரில் ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியினை இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சி விஞ்சிச்சென்றதன் விளைவாக வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது.** 2020 ஒத்தோபரில், வர்த்தகக் கணக்கில் ஐ.அ.டொலர் 514 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்தது. இது, 2019 ஒத்தோபரில் பதிவாகிய ஐ.அ.டொலர் 838 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினை விட குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும். மீளாய்வுக்குட்படுகின்ற மாத காலப்பகுதியில் வர்த்தக மீதி மேம்படுவதற்கு இறக்குமதிகளில் வீழ்ச்சி (ஐ.அ.டொலர் 453 மில்லியன்), காரணமாக அமைந்தது. இது, ஏற்றுமதிகளின் வீழ்ச்சியினைவிட (ஐ.அ.டொலர் 129 மில்லியன்) அதிகமானதாகும். 2020 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரை வர்த்தகக் கணக்கின் திரண்ட மீதியானது 2019இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 6,451 மில்லியன் கொண்ட பற்றாக்குறையிலிருந்து ஐ.அ.டொலர் 4,852 மில்லியனுக்கு சுருங்கியது. இப்பெறுபேற்றுக்குப் பங்களிக்கின்ற முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

அதேவேளை, வர்த்தக நியதிகள், அதாவது இறக்குமதிகளின் விலைக்கான ஏற்றுமதிகளின் விலை விகிதாசாரமானது ஏற்றுமதி விலைகளில் காணப்படும் வீழ்ச்சியினைவிட இறக்குமதி விலைகள் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைவதன் காரணமாக 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – ஒத்தோபர் வரை வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள், ஐ.அ.டொ. மில்லியன்**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக நியதிகள் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்த போதிலும் கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை தீவிரமடைந்ததன் தாக்கத்தின் காரணமாக வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஒத்தோபரில் பாதிக்கப்பட்டன.** 2020 ஒத்தோபரில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 ஒத்தோபருடன் அதேபோன்று 2020 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் குறைவாகவிருந்தது. இதற்கு, நாட்டில், விசேடமான ஆடைக் கைத்தொழிலில் திட்டமிடப்பட்ட உற்பத்தி மற்றும் துணைப் பணிகளுக்கு இடையூறுகளை விளைவித்த உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் திடீர் நோய்ப்பரவல் காரணமாக அமைந்தது. மேலும், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான பாதகமான உலகளாவிய சந்தை நிலைமைகள், பல நாடுகளும் எதிர்கொண்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலை மூலம் மோசமடைந்து இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு குறைவான கேள்வி ஏற்படுவதற்கு வழிவகுத்து. இதன் விளைவாக, 2020 ஒத்தோபரில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 848 மில்லியனாக்கு வகைகூறியது. இது 2019 ஒத்தோபரை விட 13.2 சதவீதம் குறைவாகவும் 2020 செத்தெம்பரைவிட 15.2 சதவீதம் குறைவாகவும் இருந்தது.

புடவை மற்றும் ஆடைகள் அத்துடன் அநேகமான சிறிய துறைகள்; இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் உள்ளடங்கலாக பெற்றோலிய உற்பத்திகள்; மற்றும் இயந்திர மற்றும் பொறியியல் உபகரணங்கள் என்பவற்றின் பலவீனமடைந்த செயலாற்றுகையின் காரணமாக கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 ஒத்தோபரில் 16.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அத்துடன் ஏனைய சந்தைகளுக்கு ஏற்றுமதிகள் குறைவடைந்தமை மூலம் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி 18.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், பிளாத்திக்கு உடைப் பொருட்கள், சத்திர சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் போன்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுடன் தொடர்புபட்ட அவற்றின் துணை வகைகள் மூலம் முன்னிலை வகித்து பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் அத்துடன் இறப்பர் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன.

தேங்காய் ஏற்றுமதிகள் (பிரதானமாக தேங்காய் எண்ணெய் மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள்), வாசனைத்திரவியங்கள் (பிரதானமாக கறுவா) மற்றும் இயற்கை இறப்பர் ஆகியன மூலம் முன்னிலை வகித்து வேளாண்மைப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 ஒத்தோபரில் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தன. அதேவேளை, தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயானது அலகுப்பெறுமதி அதிகரித்த போதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் அளவில் வீழ்ச்சியின் காரணமாக 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த ஏனைய வேளாண்மை ஏற்றுமதித் துறைகள் கடலுணவு, சிறு வேளாண்மை உற்பத்திகள் (பிரதானமான பழங்கள் மற்றும் உண்ணத்தக்க விதைகள்) மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

கனிம ஏற்றுமதிகள், 2019 ஒத்தோபாருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் 36.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. படிகக்கல் மற்றும் கருங்கல் போன்ற புவிசார் மற்றும் கற்கள் ஏற்றுமதிகள் அதிகரித்த அதேவேளை கிரபைற்று தூள் மற்றும் இயற்கை மணல் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. மேலும், உலோகத்தாது மற்றும் டைட்டானியம் அத்துடன் ஸிர்கோணியம் போன்ற கசடு ஏற்றுமதியும் வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 ஒத்தோபரில் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை அலகுப் பெறுமதிச் சுட்டெண், 10.6 சதவீதத்தினால் சீர்குலைந்து, குறைவான அளவுகள் மற்றும் குறைவான விலைகள் இரண்டின் மூலமும் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சி தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனைக் குறித்துக்காட்டுகின்றது.

வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஒத்தோபர் 2019 ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2020 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன-ஒத் 2019 ஐ.அ.டொ. மில் | சன-ஒத் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **762.1** | **633.3** | **-16.9** | **7,839.8** | **6,313.2** | **-19.5** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 38.7 | 39.1 | 1.0 | 376.0 | 387.7 | 3.1 |
| விலங்குத்தீன் | 14.2 | 4.7 | -66.7 | 109.1 | 88.6 | -18.8 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 441.6 | 358.2 | -18.9 | 4,628.4 | 3,645.0 | -21.2 |
| இதில் ஆடைகள் | 407.9 | 325.7 | -20.2 | 4,305.6 | 3,245.4 | -24.6 |
| புடவைகள் | 25.4 | 26.3 | 3.7 | 235.8 | 207.9 | -11.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.3 | 6.2 | -25.1 | 87.0 | 191.8 | 120.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 70.3 | 77.9 | 10.8 | 732.5 | 644.8 | -12.0 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 30.0 | 10.4 | -65.3 | 254.6 | 133.3 | -47.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 33.4 | 20.8 | -37.9 | 341.4 | 266.1 | -22.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.8 | 4.2 | -45.3 | 135.2 | 58.7 | -56.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 41.5 | 24.4 | -41.3 | 409.3 | 321.1 | -21.5 |
| இரசாயன உற்பத்திகள் | 14.5 | 16.0 | 10.4 | 148.7 | 139.7 | -6.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.3 | 8.1 | -21.5 | 111.7 | 82.5 | -26.1 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 5.4 | 2.6 | -52.2 | 38.5 | 38.9 | 0.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 7.0 | 3.0 | -57.3 | 89.2 | 47.0 | -47.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.2 | 42.6 | 582.6 | 61.3 | 149.3 | 143.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.4 | 5.8 | -56.8 | 148.7 | 90.4 | -39.2 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.2 | 1.7 | -22.5 | 25.0 | 18.2 | -27.0 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 25.7 | 13.9 | -46.0 | 230.3 | 202.1 | -12.2 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **210.2** | **211.4** | **0.6** | **2,079.1** | **1,949.9** | **-6.2** |
| தேயிலை | 113.8 | 112.2 | -1.4 | 1,139.1 | 1,031.8 | -9.4 |
| இறப்பர் | 1.2 | 2.4 | 106.4 | 21.3 | 22.3 | 4.9 |
| தேங்காய் | 26.3 | 32.5 | 23.7 | 284.8 | 289.8 | 1.8 |
| வாசனைத்திரவியங்கள் | 32.6 | 33.6 | 3.0 | 267.4 | 266.7 | -0.3 |
| காய்கறிகள் | 2.9 | 4.4 | 52.2 | 27.0 | 32.9 | 22.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.2 | 2.0 | -7.0 | 28.0 | 21.7 | -22.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 12.1 | 8.7 | -28.0 | 92.1 | 119.8 | 30.0 |
| கடலுணவு | 19.2 | 15.6 | -18.9 | 219.6 | 165.0 | -24.9 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.5** | **2.2** | **-36.8** | **28.1** | **18.1** | **-35.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.5** | **1.6** | **3.4** | **14.2** | **12.2** | **-13.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **977.3** | **848.4** | **-13.2** | **9,961.3** | **8,293.4** | **-16.7** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**குறைவான மசகெண்ணெய் விலைகள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகள் 2020 ஒத்தோபரில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.** வணிகப் பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 1,363 மில்லியனுக்கு 24.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதனூடாக 2020 மாச்சு தொடக்கம் தொடர்ச்சியாக ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிப்போக்கு அவதானிக்கப்பட்டது. அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளிலும் அதாவது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் ஆகியவற்றில் பதிவாகிய வீழ்ச்சிகள் 2020 ஒத்தோபரில் இப்பெறுபேற்றுக்குப் பங்களித்தன.

2020 ஒத்தோபரில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 34.4 சதவீதத்தினால் குறைவாகக் காணப்பட்டது, இதற்கு தனிப்பட்ட பயன்பாட்டிற்கான ஊர்திகள் இறக்குமதியில் வீழ்ச்சி பிரதான காரணமாக அமைந்தது. உணவு மற்றும் குடிபானங்கள் இறக்குமதி மீதான செலவினம், 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. காய்கறிகள், பழங்கள், கடலுணவு, பால் உற்பத்திகள், குடிபானங்கள் மற்றும் தானியங்கள் அத்துடன் அரைக்கும் ஆலை கைத்தொழில் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. மாறாக சீனி, எண்ணெய் மற்றும் கொழுப்பு (பிரதானமாக தேங்காய் எண்ணெய்), வாசனைத்திரவியங்கள் (பிரதானமாக மிளகாய் மற்றும் கொத்தமல்லி) இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தது. உலக சந்தையில் சீனியின் விலைகள் 2020 மாச்சு அதேபோன்று 2019 ஒத்தோபர் முதல் 2020 ஒத்தோபரில் மிக உயர்வானதாகக் காணப்பட்டது, குறைவான மழை வீழ்ச்சியின் காரணமாக முக்கிய சீனி உற்பத்தி செய்யும் நாடுகளின் குறைவான வெளியீடு இதற்குக் காரணமாகவிருந்தது. சீனி மற்றும் தேங்காய் எண்ணெய் இரண்டினதும் இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிகள் 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் கணிசமாக அதிகரித்தன. உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது தனிப்பட்ட ஊர்திகள் மூலம் முன்னிலை வகித்து இவ்வகையின் கீழ் அநேகமான இறக்குமதி வகைகளின் வீழ்ச்சியின் காரணமாக 49.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருட்களின் இவ் வீழ்ச்சிக்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பகுதியளவான காரணமாக அமைந்தன. மருந்துப்பொருட்கள் போன்ற சில கட்டுப்படுத்தப்படாத பொருட்களின் இறக்குமதிச் செலவினமும் வீழ்ச்சியடைந்தது.

இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் 27.5 சதவீத வீழ்ச்சியொன்றினாலும் ஆடைகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்ற புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களில் 21.3 சதவீத வீழ்ச்சியினாலும் தூண்டப்பட்டு 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் 21.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இடைநிலைப் பொருட்களின் அநேகமாக அனைத்து ஏனைய பாரிய மற்றும் சிறிய துணை வகைகளும் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. உலக சந்தையில் குறைவான எண்ணெய் விலையின் காரணமாக அனைத்து எரிபொருள் வகைகளினதும் அதாவது மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளின் விலைகளில் குறைவின் காரணமாக எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. 2020 ஒத்தோபரில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலையானது 2019 ஒத்தோபரின் பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 66.06 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 41.77 ஆக இருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய் அளவுகளும் 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் வீழ்ச்சியடைந்த அதேவேளை சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி அதிகரித்தது.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள், அனைத்து மூன்று முக்கிய வகைகளிலும் அதாவது இயந்திரம் மற்றும் உபகரணங்கள், கட்டடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்களின் குறைவின் மூலம் 2019 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2020 ஒத்தோபரில் 24.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் அதேபோன்று இம்மூன்று வகைகளின் கீழ்வருகின்ற அநேகமாக அனைத்து துணை வகைகளும் வீழ்ச்சியடைந்தன. இப்பெறுபேற்றுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பகுதியளவில் காரணமாக அமைந்தது.

இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 2020 ஒத்தோபரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 12.6 சதவீதத்தினாலும் 14.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து குறைவான அளவுகள் மற்றும் குறைவான விலைகள் ஆகிய இரண்டின் மூலமும் இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது என்பதனைக் குறித்துக்காட்டுகின்றன.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)**

| வகை | ஒத்தோபர் 2019 ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-ஒத் 2019 ஐ.அ.டொ. மில் | சன-ஒத் 2020 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **383.3** | **251.6** | **-34.4** | **3,195.3** | **2,818.4** | **-11.8** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 128.9 | 122.8 | -4.7 | 1,138.2 | 1,271.7 | 11.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 4.0 | 3.3 | -18.2 | 28.8 | 27.4 | -5.0 |
| பால் உற்பத்திகள் | 25.5 | 20.3 | -20.2 | 250.4 | 273.3 | 9.1 |
| காய்கறிகள் (ஆ) | 29.6 | 17.6 | -40.7 | 237.2 | 280.1 | 18.1 |
| கடலுணவு | 19.0 | 11.5 | -39.7 | 179.0 | 164.9 | -7.9 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 17.5 | 32.8 | 87.3 | 160.2 | 233.4 | 45.7 |
| வாசனைத்திரவியங்கள் | 10.6 | 11.7 | 10.5 | 90.1 | 106.0 | 17.7 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.7 | 25.8 | 13.4 | 192.5 | 186.6 | -3.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 254.4 | 128.7 | -49.4 | 2,057.1 | 1,546.7 | -24.8 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 84.6 | 0.5 | -99.4 | 651.0 | 281.9 | -56.7 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 54.2 | 51.9 | -4.3 | 453.6 | 493.6 | 8.8 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 19.2 | 16.8 | -12.5 | 165.7 | 134.2 | -19.0 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 26.9 | 12.8 | -52.4 | 230.6 | 165.9 | -28.1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 25.9 | 15.1 | -41.6 | 199.4 | 210.7 | 5.7 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 17.7 | 13.5 | -23.6 | 140.4 | 118.0 | -16.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 26.0 | 18.1 | -30.3 | 216.4 | 142.4 | -34.2 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,040.2** | **817.5** | **-21.4** | **9,420.7** | **7,393.2** | **-21.5** |
| எரிபொருள் | 308.3 | 223.4 | -27.5 | 3,238.8 | 2,128.6 | -34.3 |
| இதில் மசகெண்ணெய் | 95.0 | 28.0 | -70.5 | 824.3 | 479.2 | -41.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 192.4 | 172.0 | -10.6 | 2,245.2 | 1,481.3 | -34.0 |
| நிலக்கரி | 20.9 | 23.4 | 12.2 | 169.2 | 168.1 | -0.6 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 19.0 | 13.5 | -28.8 | 158.1 | 80.7 | -48.9 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 277.1 | 218.1 | -21.3 | 2,404.2 | 1,883.6 | -21.7 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 46.6 | 35.0 | -24.9 | 382.7 | 312.1 | -18.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 14.9 | 14.2 | -4.6 | 155.6 | 161.8 | 4.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 33.0 | 24.1 | -27.1 | 266.9 | 314.1 | 17.7 |
| அடிப்படை உலோகங்கள் | 69.1 | 63.4 | -8.2 | 477.8 | 385.4 | -19.3 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 61.0 | 51.8 | -15.1 | 506.1 | 440.3 | -13.0 |
| இரசாயன உற்பத்திகள் | 76.9 | 71.8 | -6.6 | 698.2 | 669.9 | -4.1 |
| வளமாக்கி | 27.4 | 22.5 | -18.1 | 194.9 | 161.5 | -17.1 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 24.6 | 17.4 | -29.3 | 199.5 | 182.7 | -8.4 |
| கனிம உற்பத்திகள் | 26.4 | 11.5 | (56.5) | 185.4 | 143.5 | -22.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 56.1 | 50.9 | -9.2 | 552.6 | 529.0 | -4.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **391.0** | **293.5** | **-24.9** | **3,789.4** | **2,920.9** | **-22.9** |
| இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 218.2 | 183.0 | -16.1 | 2,034.9 | 1,764.7 | -13.3 |
| கட்டடப் பொருட்கள் | 133.8 | 87.5 | -34.6 | 1,277.2 | 852.2 | -33.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 38.5 | 22.8 | -40.9 | 471.9 | 301.3 | -36.1 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.2 | -44.2 | 5.3 | 2.6 | -50.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.2** | **0.2** | **-83.5** | **6.4** | **12.4** | **92.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,815.7** | **1,362.8** | **-24.9** | **16,411.8** | **13,145.0** | **-19.9** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,507.4** | **1,139.4** | **-24.4** | **13,173.0** | **11,016.4** | **-16.4** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பயறு, வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**2020 ஒத்தோபரில் தொடர்ச்சியாக ஏழாவது மாதத்திற்காகவும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எதுவும் பதிவாகியிருக்கவில்லை.** 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 1,495,055 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2020இல் முடிவடைகின்ற பத்து மாதகாலப்பகுதியின் போது மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 507,311ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற சுற்றுலாவிலிருந்தான திரண்ட வருவாய்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 66.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து 2020 ஒத்தோபர் வரை ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாகக் காணப்பட்டது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ச்சியாக ஐந்தாவது மாதத்திற்காகவும் தொடர்ந்தும் அதிகரித்தன.** தொழிலாளர் பணவனுப்பல்கள், 2020 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 631 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது 2019இன் தொடர்புடைய

காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரி தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் திரண்ட வருவாய்கள் ஐ.அ.டொலர் 5,680 மில்லியனுக்கு 2.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**அரசாங்கப் பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடு மாத காலப்பகுதியில் சிறிய தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.** 2020 ஒத்தோபரில் ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் ஐ.அ.டொலர் 20 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு முதலீட்டு தேறிய உட்பாய்ச்சலொன்று பதிவாகி 2020 சனவரி – ஒத்தோபர் வரையான காலப்பகுதியின் போது திரண்ட தேறிய உட்பாய்ச்சலை ஐ.அ.டொலர் 532 மில்லியனாக அதிகரித்து. 2020 ஒத்தோபரில் இத்தேறிய வெளிப்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட மொத்த உட்பாய்ச்சலினதும் ஐ.அ.டொலர் 21 மில்லியன் கொண்ட மொத்த வெளிப்பாய்ச்சலொன்றினதும் பெறுபேறொன்றாக அமைந்தது. ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற கூட்டுத்தொகை 2020 ஒத்தோபர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 56 மில்லியனாக ஒப்பீட்டளவில் சிறியதாக காணப்பட்டது.

**கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, 2020 ஒத்தோபரில் தேறிய அடிப்படையில் வெளிநாட்டு முதலீடுகளைப் பதிவுசெய்த அதேவேளை அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்தன.** முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டினையும் கருத்திற்கொள்கையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, 2020 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 21 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. இவ் உட்பாய்ச்சல், மாதகாலப்பகுதியில் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட பாரிய உட்பாய்ச்சலொன்றின் பெறுபேறாகவிருந்த அதேவேளை இரண்டாந்தரச் சந்தை ஐ.அ.டொலர் 29 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. திரண்ட அடிப்படையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, 2020 ஒத்தோபரில் முடிவடைகின்ற பத்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 194 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள், 2020 ஒத்தோபரில் ஐ.அ.டொலர் 185 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் தீர்ப்பனவின் வாயிலாக பாரிய படுகடன் மீள்கொடுப்பனவொன்றுக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2020 ஒத்தோபர் இறுதியில் போதிய மட்டத்தில் காணப்பட்டன.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அளவு, 2020 ஒத்தோபரின் ஆரம்பத்தில் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட முதிர்வடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் மீள்கொடுப்பனவின் மூலம் ஐ.அ.டொலர் 5.9 பில்லியனைக் கொண்டதாக இருந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாக இருந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 8.6 பில்லியனாக விளங்கி 6.2 மாதங்களைக் கொண்ட இறக்குமதிகளுக்கு போதுமானதாகவிருந்தது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபா, மாதத்தின் நடுப்பகுதியில் சில தளம்பல்களை எடுத்துக்காட்டியமைக்கு மத்தியில் 2020 ஒத்தோபர் காலப்பகுதியில் 0.7 சதவீத சிறிய உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.** ஒட்டுமொத்தமாக 2020 திசெம்பர் 14 வரையான ஆண்டுகாலப்பகுதியில் தற்போது வரையிலும் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 2.4 சதவீதம் கொண்ட தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. 2020 ஒத்தோபரிலும் வெளிநாட்டு செலாவணியினைக் கொள்வனவு செய்வதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் மத்திய வங்கி தலையிட்டது. இதன்மூலம் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மீள்நிறைவுசெய்தது. அதற்கமைய, 2020இல் நவெம்பர் இறுதிவரை தேறிய அடிப்படையொன்றில் மத்திய வங்கி ஈர்த்துக்கொண்ட தொகை ஐ.அ.டொலர் 305 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2020 திசெம்பர் 14 வரை குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலித்து யூரோ, ஸ்ரேலிங் பவுண், யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்த அதேவேளை இந்திய ரூபாய்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | (2020 திசெ 14 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.4% |
| யூரோ | +2.6% | -9.8% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -3.7% |
| யப்பானிய யென் | -1.0% | -6.5% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -9.2% |
| இந்தியன் ரூபா | +2.6% | +1.0% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி